Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 80

புதன்கிழமை
14 பெப்ரவரி 2024

மாசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"தேர்தல் வருகுது
தேர்தல் வருகுது எண்டு
கடைசிமட்டும்
பூச்சாண்டிதான்
காட்டப்போறாரோ
தெரியேலை"

# ஜனாதிபதித் தேர்தல் 2024இல் நடந்தே தீரும்!

## பொதுத்தேர்தல் அடுத்த வருடமே
## ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு உறுதி

கொழும்பு, பெப்ரவரி 14

**இந்த வருடத்தில் உரிய காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். அடுத்தவருடம் பொதுத்தேர்தல் இடம்பெறும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.**

15

## நுண்நிதிக் கடன்களால் 2,800,000 பேர் பாதிப்பு

### இவர்களில் பெண்களே அதிகம்
### துறைசார் குழுவில் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 14

நுண்நிதிக் கடன் பிரச்சினைகளால் நாடளாவிய ரீதியில் சுமார் 28 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் பெண்களே அதிகம் என்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல்

15

## ஐ.தே.க.வுக்கு சஜித் எப்போதும் வரலாம்!



கொழும்பு, பெப். 14

சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியில் வளர்ந்த பிள்ளை. அவர் எந்நேரத்தில் வேண்டுமானாலும் தாய்வீட்டுக்குத் திரும்பலாம் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

15

### 'அஸ்வெசும' கொடுப்பனவு முறையீடுகள்

## வடக்கு மாகாணத்தில் விசாரணைகள் பூர்த்தி!

கொழும்பு, பெப். 14

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் கொடுப்பனவுகள் தொடர்பான மேன்முறையீட்டு விசாரணைகள் வடக்கு மாகாணத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

15

## யாழ். வருகிறார் தென்னக்கோன்

யாழ்ப்பாணம், பெப். 14

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல்துறை அமைச்சர் ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளனர்.

15

## 'ஒருநாடு; இருதேசம்' வினாவால் சர்ச்சை!

### விசாரணையில் பொலிஸ்

யாழ்ப்பாணம், பெப். 14

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் தரம்-11 தமிழ்மொழிப் பாடப் பரீட்சை வினாத்தாளில் 'ஒருநாடு; இருதேசம்'

15

## தங்கம் வீழ்ச்சி

கொழும்பு, பெப். 14

நாட்டில் தங்கத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நேற்றைய விலை நிலைவரங்களின்

15

## தீப்பற்றிய பனங்காடு!

மன்னார், பெப். 14

தலைமன்னார், பியர் பகுதியிலுள்ள பனங்காடு தீப்பற்றி எரிந்துள்ளது. நேற்று நண்பகல் வேளையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

15

## சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு!


### மக்கள் பெரும் அந்தரிப்பு
### போராட்டம் இன்றும் தொடரும்

கொழும்பு, பெப். 14

மேலதிக கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, 72 சுகாதாரத் தொழிற்சங்

15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல் தேடிய ஆறு பேர் கைது


முல்லைத்தீவு, பெப்.14

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலையில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஆறுபேர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. போர்க்காலத்தில் புதைக்கப்பட்டவை என்று கூறப்படும் தங்கம் போன்ற பெறுமதியான பொருள்களைத் தேடும் நோக்கில் சந்தேகநபர்கள் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். நெடுங்கேணி, மதவாச்சி, பதவியா, தெய்நதர, ஹக்மான போன்ற பகுதிகளை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-19)

# நஞ்சுண்டான்குளச் சூழலில் சட்டவிரோத மணல் அகழ்வு

## பாதுகாப்புத் தரப்பினர் பாராமுகம்; பிரதேச மக்கள் குற்றச்சாட்டு



கிளிநொச்சி, பெப்.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தேராவில், நஞ்சுண்டான்குளப்பகுதியில் பெருமளவு மணல் அகழ்வு நடைபெறுவதுடன், மரங்களும் வெட்டப்படுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தேராவில் கிராமத்தில் இருந்து 6 கிலோ மீற்றர் தூரத்தில் நஞ்சுண்டான் குளம் உள்ளது. இந்தக் குளத்தைச் சூழ கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சட்டவிரோத மணல் அகழ்வும், மரம் தறிப்பும் நடைபெற்று வருகின்றன.

மணலும், மரங்களும் ஏ-35 வீதி வழியாக, பரந்தன் முல்லைத்தீவு வழியாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன. இது தொடர்பாகப் பலதடவைகள் சுட்டிக்காட்டிய போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தச் செயற்பாடுகளில் இராணுவத்தினர், பொலிஸார், வனவளத் திணைக்களத்தினர், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தொடர்புபட்டுள்ளனர் என்றும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (எ-13)

# கைது 680

கொழும்பு, பெப். 14

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசேட சோதனை நடவடிக்கைகளின்கீழ், நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 680 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 554 பேரும், குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 126 பேரும் அடங்குகின்றனர். (ச-இ)

# செலவுக்கேற்ற வருமானம் விவசாயிகளுக்கு இல்லை!

## மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.14

நெல் உற்பத்திக்கான செலவீனம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்துள்ளது என்று மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடந்த விவசாயக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது ஒரு ஏக்கரில் நெல் பயிரிட ஒரு இலட்சத்துக்கு 21 ஆயிரம் ரூபா செலவு ஏற்படுகின்றது. ஒரு ஏக்கரில் கிடைக்கும் விளைச்சல் ஆயிரத்து 200 கிலோவாகக் காணப்படுகின்றது.

ஒரு கிலோ நெல்லை உற்பத்தி செய்ய விவசாயி ஒருவருக்கு சுமார் 120 ரூபா செலவு ஏற்படுகின்றது. நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், நெல் கொள்வனவுக்குக் கட்டுப்பாட்டு விலை அல்லது உத்தரவாதவிலை பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களால் நிர்ணயிக்கப்படவில்லை. 74 கிலோ நெல்லை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்க வேண்டியுள்ளது என்று விவசாயிகள் குறிப்பிடுகின்றனர் - என்றார்.

அதேவேளை கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான விலையில் நெல்லைக் கொள்வனவு செய்கின்றன என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. சங்கங்களிடம் இது தொடர்பாக கோரிக்கை ஒன்றை முன்வைப்பது என்று கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. (எ-125)

# நேரத்தை வீணடித்த அமைச்சர் டக்ளஸ்!

## விவசாயிகள் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பு என்று தெரிவித்து எம்மைக் காக்கவைத்து நேரத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வீணடித்துவிட்டார் என்று விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடந்த விவசாயக் குழுக் கூட்டத்திலேயே விவசாயிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்திருந்த போது, உங்கள் பிரச்சினைகள் தொடர்பில் பேசவாருங்கள் என்று அமைச்சரால் எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. நாம் அமைச்சரின் அலுவலகத்தில் இரு மணித்தியாலம் காத்திருந்தோம். அதன்பின்னர் மாவட்டச் செயலகத்தில் இரு மணித்தியாலம் காத்திருந்தோம். ஆனால் எங்கள் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்கப்படவில்லை.

நாம் விவசாய நடவடிக்கைக்காக வேறு ஒருவரைக் கூலிக்கு அமர்த்தியே அங்கு சென்றோம். இவ்வாறு நேரத்தை வீணடிப்பவர்கள் இது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும். இந்த விடயத்தை கண்டனமாக பதிவு செய்து இந்தக் கூட்டத்தின் அறிக்கையில் குறிப்பிட்டு அனுப்புங்கள். அப்பொழுதுதான் எமது சிரமங்கள் இவர்களுக்குப் புரியும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (எ-125)

# அறிவிப்பின்றி மின்வெட்டு

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

கோப்பாய் மற்றும் திருநெல்வேலி பால்பண்ணைப் பகுதிகளில் முன்னறிவிப்பின்றி மின் வெட்டியதால் கடந்த புதன்கிழமை பெரும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்று அந்தப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மின்சாரசபையுடன் பொதுமக்கள் தொடர்பு கொண்டபோது அவர்கள் அலட்சியமாகப் பதிலளித்துள்ளனர். மின்சாரசபை எமக்கு எந்த அறிவித்தலையும் தொலைபேசி மூலமாகவோ அல்லது செய்திகள் மூலமாகவோ வழங்கவில்லை. மின்வெட்டால் பொதுமக்கள் மற்றும் தொழில் நிலையங்கள் பாதிப்படைந்துள்ளன என்றும் மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். (ப-125)

# மாவாவுடன் இருவர் கைது

யாழ். பெப்.14

மாவா போதைப் பாக்கை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் மானிப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 20 வயதுடைய இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் அவர்களிடம் இருந்து 10 கிராம் மாவா போதைப் பாக்குக் கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

# செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்ப்பாணம், கட்டுடை மானிப்பாய், விநாயகர் முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா முன்பள்ளி மைதானத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ. பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதியாக திருமதிறெ.செ.றி. மோகனதாஸ் கலந்துகொள்ளவுள்ளார். (ப-63)

# போதையில் சாரத்தியம் நால்வருக்குத் தண்டம்!

கிளிநொச்சியில் பல பகுதிகளிலும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக நால்வருக்கு ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு மாத காலத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்திய நபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது அவருக்கு 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 55 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய இரண்டு பேருக்குத் தலா 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது சாரதி அனுமதிப்பத்திரங்களும் ஒரு மாத காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (ம-113)

# ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில், சில ஊடகவியலாளர்களுக்கு கூட்டத்தில் கலந்துகொள்வதற்கும், செய்தி சேகரிப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்களால் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஒருசில ஊடகவியலாளர்களைப் பழிவாங்கும் நோக்குடன் இவ்விடயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்து ஊடகவியலாளர்களால் மட்டக்களப்பு மாவட்ட செயலக முன்றிலில் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலைக் காப்புச் சட்டம் செல்லுபடியற்ற சட்டமே

## ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 14**

**நாட்டின் அரசமைப்பு மற்றும் உயர்நீதிமன்றத்தின் திருத்தங்கள் என்பனவற்றுக்கு அமைவாக நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. இந்தச் சட்டத்துக்கு சட்ட அந்தஸ்து கிடையாது - இவ்வாறு கொழும்பில் சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழ் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது முற்றிலும் சட்டத்துக்கு விரோதமானதொரு செயற்பாடு.

இந்தச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களில் ஐந்து பிரதான திருத்தங்கள் நாடாளுமன்றகுழுநிலை வேளையின்போது சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை செயற்படுத்தினால் இலங்கையின் மனித உரிமைகளை சவப்பெட்டியில் அடக்கம் செய்ய வேண்டும். ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு மத்தியில் சிறந்த மாற்றத்தை ஒருபோதும் உருவாக்க முடியாது - என்றார். (ச-இ)

## தற்கொலை செய்த ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார் அநுர!

### சீண்டுகிறார் திஸ்ஸ குட்டியாராச்சி

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறும் பட்சத்தில் நாட்டை ஆளமுடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

"இலங்கை வரலாற்றில் மன்னர்களுக்கு பிறகு, அழுத்தம் காரணமாக நாட்டை ஆள முடியாமல் ஓடிய தலைவர்தான் கோத்தாபய ராஜபக்ச. அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகமாட்டார் என்பது உறுதி. சிலவேளை கனவிலாவது அவர் ஜனாதிபதியானால் அழுத்தம் தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார். ஏனெனில் அந்தளவுக்கு பொய்யுரைக்கின்றார்" என்று அவர் தெரிவித்தார். (ம-44)

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் ராஜபக்சக்களின் கறுப்பாடு



கொழும்பு, பெப்.14

முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்கவை பஸில் ராஜபக்சவே ஐக்கிய மக்கள் சக்திக்குள் களமிறக்கியுள்ளார் எனத் தகவல் கிடைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

"ராஜபக்சக்கள் அவ்வளவு எளிதில் அரசியலை விடமாட்டார்கள், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கைப்பற்றுவதற்கேனும் முற்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## மாற்றுவழி இருப்பின் பேச்சு நடத்தத் தயார்

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, பெப்.14

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டத்தைத் தவிர்த்து வேறு மாற்றுவழிகள் இருப்பின் எந்தவொரு குழுவுடனும் பேசுவதற்குத் தயார் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

"அரச நிதி முகாமைத்துவம் தொடர்பில் போதிய அறிவு இல்லாத குழுக்கள் மக்கள் முன்னிலையில் பொய்யான பரப்புரைகளை முன்னெடுக்கின்றன. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது வெறும் வார்த்தைகளால் மட்டும் முடியாது" என்றும் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (எ-இ)

## அலிசப்ரி ரஹீமின் ஜீப் மோதியதில் ஒருவர் படுகாயம்

கொழும்பு, பெப். 14

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பயணித்த சொகுசு ஜீப் உழவு இயந்திரத்துடன் மோதியதில், உழவு இயந்திரத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

## ரணிலின் உரையைக் கேட்டதால் குழுக்களில் இருந்து நீக்கம்!

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணிலின் கொள்கைப் பிரகடன உரையில் கலந்துகொண்டதால் நாடாளுமன்றக் குழுக்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளேன். எதிர்க்கட்சியேஎன்னைநீக்கியது. தந்தையின் பெயரைக் குறிப்பிட்டு நான் அரசியல் செய்யவில்லை - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு மற்றும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் இருந்து நான் நீக்கப்பட்டுள்ளேன். ஆளும் தரப்பினர் என்னை நீக்கவில்லை. எதிர்க்கட்சியே என்னைக் குழுவில் இருந்து நீக்கியது. எதிர்க்கட்சித் தலைவர் [illegible] நடத்த பார்க்கிறார் - என்றார். (ச-இ)

## புதினம் தெரியுமோ?

பெரும் இழுபறிக்குப் பிறகு ஒருமாதிரி தமிழரசுக் கட்சியின்ர பதவிப்பிடுங்குப்பாடுகள் முடிவுக்கு வந்தமாதிரிக் கிடக்குது. கட்சியில தலைவர் பதவிக்கு அடுத்ததா, அதிகாரமுள்ள பதவி பொதுச்செயலாளர்தான். தேர்தல் திணைக்களத்துக்கோ, இல்லாட்டி பார்லிமெண்டுக்கோ கட்சி சார்ந்த விசயங்களை அறிவிக்கிறதெண்டால் பொதுச் செயலாளர் சைன் வைச்சால் தான் அது செல்லுபடியாகும். அதாலதான் போனமுறை தலைவருக்கே தெரியாமல் அப்ப பொதுச்செயலாளரா இருந்த துரைராசசிங்கம், கலையரசனுக்கு தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை குடுத்தவர். ஆனால் அவர் வெறும் அம்புதான்.

அப்பிடிப்பட்ட பவர் உள்ள பதவியில எல்லாரும் கண் வைக்கிறது வழக்கம் தானே. ஆனால் கட்சியில இரு எழுதப்படாத சட்டம் இருக்கு. அதென்னெண்டால்,, தலைவர் பதவியில் கிழக்கைச் சேர்ந்தவர் இருந்தால் பொதுச்செயலாளர் பதவி வடக்குக்கும், வடக்கைச் சேர்ந்தவை தலைவராகினால் கிழக்கில உள்ளவைக்கு பொதுச்செயலாளர் பதவியும் குடுக்கிறது எண்டதுதான் அந்த மரபு. அதின்படி இந்தமுறை வடக்கைச் சேர்ந்த சிறீதரன், தமிழரசின்ர தலைவரானதால கிழக்கில இருந்துதான் ஒராளைப் பொதுச்செயலாளராப் போடவேணும். ஆனால் கிழக்குக்குள்ளையே திருகோணமலையா, மட்டக்களப்பா எண்டு இன்னொரு பிரச்சினை வெடிச்சதாலதான் பொதுச்சபைக் கூட்டத்தில குழப்பம் வந்தது.

இப்ப அதெல்லாத்துக்கும் தீர்வு கண்டிட்டினம். முதல் ஒருவருசம் திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனும், அடுத்த ஒருவருசம் மட்டக்களப்பைச் சேர்ந்த சிறீநேசனும் பொதுச்செயலாளரா இருக்கப்போயினம். அதிலையும் ஒரு சிக்கல் வந்தது. அண்டையான் பொதுச்சபைக் கூட்டத்தில துணைப்பொதுச்செயலாளரா குலநாயகத்தாரைத்தான் போட்டவை. இவ்வளவுகாலமும் அவர்தான் கட்சியின்ர நிர்வாகச்செயலாளரா இருந்தவர். ஆனால் கட்சி யாப்பின்படி நிர்வாகச் செயலாளர் எண்டது அதிகாரம் ஒண்டுமேயில்லாத ஒரு 'டம்மி' பதவி. அதால அவரை இந்தமுறை துணைப்பொதுச்செயலாளரா, அதிகாரம் உள்ள பதவி ஒண்டுக்கு போட்டவை. இந்தத் துணைப்பொதுச்செயலாளருக்குத்தான், பொதுச்செயலாளர் இல்லாத நேரத்தில அவரின்ர பதவிக்குரிய வேலையளைப் பாக்க அதிகாரம் இருக்குது. இந்தமுறை பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கத்தாருக்கு திடீரெண்டு வருத்தம் வந்ததால, இதுவரைக்கும் துணைப்பொதுச்செயலாளரா இருந்த சுமந்திரன் தான் அவரின்ர இடத்தில நிண்டு பொதுச்சபைக் கூட்டத்தை நடத்தினவர்.

அப்பிடியெண்டால், துணைப் பொதுச்செயலாளரா குலநாயகத்தாரைப் போட்டால், குகதாசன் முதல் ஒருவருசத்தில பதவியில இருந்து விலக, 'ஒட்டமெட்டிக்கா' அந்த அதிகாரம் குலநாயகத்தாருக்கு வந்திடும். அதால தன்னை துணைப்பொதுச்செயலாளராப் போடச் சொல்லி சிறிநேசன் வவுனியாவில நடந்த கூட்டத்தில கேட்டிருக்கிறார். அவர் கேட்டதிலயும் நியாயம் இருந்ததால மற்றவை ஓமெண்டு சொல்லியிருக்கினம். ஆனால் தன்னைத் துணைப்பொதுச்செயலாளராத்தான் போடோணும் எண்டு குலநாயகத்தாரும் விடாப்பிடியா நிண்டவராம். அதால குரங்கு பூனைக்குட்டியளுக்கு அப்பம் பிய்ச்சுக் குடுத்த கதையா, துணைப்பொதுச்செயலாளர் பதவியை ரண்டாப் பிரிச்சு சிறீநேசனுக்கும், குலநாயகத்தாருக்கும் குடுத்திருக்காம். அதிலையும் குலநாயகத்தாருக்கு துணைப்பொதுச் செயலாளர் எண்டிட்டு அடைப்புக்குறிக்குள்ள 'நிர்வாகம்' எண்டு போட்டிருக்கு. ஆகமொத்தத்தில பதவியின்ர பேர்தான் மாறியிருக்கே தவிர, அவர் முதல் இருந்த அதே நிர்வாகச் செயலாளர் தானாம். பேசாமல் நெல்லு மூடை குடோன்லையே இருந்திருக்கலாம் போல.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பமான பாலைவனத்தில் ஆச்சரிய ஏரி!



அமெரிக்கா, கலிபோர்னியா மாநிலத்தை, அண்மையில் தாக்கிய புயல் மழையைத் தொடர்ந்து, அங்குள்ள உலகில் மிகவும் வெப்பமான 'டெட்த் வெல்லி' (Death Valley) பாலைவனத்தில் ஆச்சரியப்படும் வகையில் ஏரி உருவாகியுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வீசிய சூறாவளி மற்றும் கனமழையின் காரணமாக 'டெட்த் வெல்லி' தேசியப் பூங்கா அமைந்திருக்கும் பாலைவனப் பகுதியில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. இந்த வெள்ளத்தின் காரணமாக உருவான 11.3 கிலோ மீற்றர் நீளமும், 6.4 கிலோமீற்றர் அகலமும், 0.6 மீற்றர் ஆழமும் கொண்ட அந்த ஏரி இரண்டு மாதங்களுக்கு பின்னர் மறைந்துவிடும் என அதிகாரிகள் எதிர்பார்த்திருந்தனர்.

தற்போது ஆறு மாதங்களுக்கு மேல் கடந்துள்ள போதும் அந்த ஏரி வற்றாமலும் வறண்டு போகாமலும் இருப்பது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்தப் பாலைவனப் பகுதியில், ஆண்டுக்கு சராசரியாக 50 மில்லி மீற்றர் வரை மழை பெய்யும். எனினும், கடந்த ஆறு மாதங்களில் மட்டும் அந்தப் பகுதியில் 127 மில்லி மீற்றர் வரை மழை பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

# நினைவாற்றல் சிக்கலால் நெருக்கடிக்குள் பைடன்!

நியூயோர்க், பெப்.14

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள நிலையில், மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் வயது மற்றும் அவரது நினைவாற்றல் தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.**

வயது காரணமாக, பைடனின் நினைவாற்றலில் பல குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன என்று அண்மையில் வெளியான அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பிரச்சினை அமெரிக்காவில் விவாதப்பொருளாக மாறியுள்ளது. மேலும் குடியரசுக் கட்சி இதனைப் பலமான பிரசாரக் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை எனக் கூறி ஜோ பைடன் அந்த அறிக்கையை நிராகரித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகார இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன், பைடனின் வயது குறித்து முக்கியமான கருத்துகளை வெளியிட்டிருந்தார். செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், பைடனின் வயது தொடர்பான பிரச்சினை நியாயமானது என ஹிலாரி கிளின்டன் கூறியுள்ளார். மற்றொரு வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப் விடயத்தில் வயதுப் பிரச்சினை உள்ளது. இளம் வாக்காளர்களை ஈர்ப்பதில் இருவரும் சிரமங்களைச் சந்திக்க நேரிடும்.

வயது ஒரு பிரச்சினையாக இருந்தாலும், வாக்காளர்கள் சிறந்த வேட்பாளரைத் தெரிவு செய்வது முக்கியமானது. பைடன் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவேண்டும் எனவும் ஹிலாரி கிளின்டன் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



## காலிஸ்தான் ஆதரவாளரின் வீடு மீது துப்பாக்கிச்சூடு

றொறன்ரோ, பெப்.14

கனடாவில் காலிஸ்தான் ஆதரவு சீக்கியர் ஒருவரின் வீட்டை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று ஒன்ராரியோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாகக் கூறப்படும் வீட்டில் நிர்மாணிப்புப் பணிகள் நடைபெற்று வருவதுடன் எவரும் அதில் தங்கியிருக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

நியூயோர்க், பெப்.14

நியூயோர்க்கில் மர்மநபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், அந்த நாட்டுப்பொலிஸார்தீவிரவிசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-இ)

## ஆளில்லா விமானம்மூலம் ரஷ்யா கடும் தாக்குதல்!

கீவ், பெப்.14

உக்ரைன் மீது ஒரே இரவில் ரஷ்யா ஆளில்லா விமானங்கள் மூலம் 17 தாக்குதல்களை நடத்தியுள்ளது.

அதேநேரம், 14 ஆளில்லா விமானங்களும், கப்பலில் இருந்து ஏவப்பட்ட ஏறிகணை ஒன்றும் தங்களால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன என்று உக்ரைன் தெரிவித்துள்ளது. (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படும்.

**கன்னி:** இன்று மனதில் அவ்வப்போது சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். மாலையில் உறவினர் ஒருவர் மூலம் சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

## துஷ்பிரயோகத்துக்கு இனி ஆண்மை நீக்கம்

நியூயோர்க், பெப்.14

சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்படும் என்று மடகஸ்கர் அரசு அறிவித்துள்ளது.

புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு அந்தநாட்டில் வரவேற்புக் கிடைத்துள்ளது. (எ-இ)

## தகிக்கும் வெப்பத்தால் மூடப்படும் பாடசாலை

மெல்பேர்ன், பெப்.14

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் நிலவும் கடும் வெப்பத்தால் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளன.

வெப்பக் காற்று, மின்னல்தாக்கம் ஆகியவற்றை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட காட்டுத்தீ போன்று அங்கு மீண்டும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நினைவேந்தல் நிகழ்வு!

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல்துறைக்கலைஞரும், திரைப்பட இயக்குநரும், எழுத்தாளரும், மாமனிதருமான அமரர் முல்லை ஜேசுதாசனின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்றது.

பழந்தமிழர் பாசறையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் பலரும் கலந்துகொண்டனர். (ப-19)



## கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வேம்பொடுகேணி, முகமாலை ஆகிய கிராமங்களில் மீளக்குடியமரவுள்ள மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி ச. குணஜா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், தேசிய கண்ணிவெடி அகற்றல் அமைப்பு அலுவலர்கள், மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், கிராமமட்ட அலுவலர்கள் மற்றும் மீளக்குடியமர்த்தப்படாத பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-9)



## நிர்வாகசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.14

குடிசார் அமைப்புகளின் சம்மேளனத்தின் முதலாவது நிர்வாக சபைக் கூட்டம் தொண்டைமானாறு இந்து அபிவிருத்தி நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளனத்தின் தலைவி திருமதி ம.தமிழ்ச்செல்வி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளன உறுப்பினர்கள், பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பெண்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-159)

## தானியங்கள் வழங்கல்



வியாபாரிமூலை கிராம அலுவலர் பிரிவில் வீட்டுத்தோட்ட ஊக்குவிப்புக்கான விதை, தானியங்கள் வழங்கும் நிகழ்வு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.புவனதாஸ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் சத்தியசீலன், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுபச்செல்வன், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-159)



சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தை அமாவாசை அபிராமிப்பட்டர் பெருவிழா சிறப்பு அபிஷேகம், பூஜைகளுடன் அண்மையில் நடைபெற்றது. (ப-66)



நயினாதீவு, படகுத்துறை ஆலடி ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ப-66)



குப்பிழான், விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் 77 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக்கொடை நிகழ்வு சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ப-66)




இணுவிலிலுள்ள சிறுவர் விருத்திமைய மாணவர்களின் கலைநிகழ்ச்சி மற்றும் பட்டமளிப்பு விழா என்பன இணுவில் பொது நூலகத்தில் அண்மையில் நடைபெற்றது. ம.கஜந்தரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், ச.கிருபானந்தன், நா.கிருபாகரன், சி. அழகேசன், க.வீரசக்திரூபன், நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 02 . 1950



மறைவு 09 . 02 . 2024

### A.K. இராமலிங்கம் இராசலிங்கம்

(Former Mechanic - Srilanka Transportaion Board - Mannar and Mullaitivu)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட A.K.இராமலிங்கம் இராசலிங்கம் அவர்கள் கடந்த (09.02.2024) வெள்ளிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - அரியமலர் தம்பதியினரின் அன்பு மருமகனும், சாந்தநாயகியின் அன்புக் கணவரும், துஸ்யந்தி, தமயந்தி, றூபினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரட்ணலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் அமிர்தவல்லி, எல்லாள இராஜலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஸ்ரீபிரகாஸ், விபூசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆகாஸ், அசானா, ரேயா, ரிசான் ஆகியோரின் பாசமிகு பேரனும், பாக்கியநாதன், பத்மநாதன், பாஸ்கரநாதன், ஜெகநாதன், வசந்தி, சுகந்தி, பிரதாபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2024) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
077 698 5976

தகவல்:
மைத்துனர் R.செல்வம்

(Cr.1807) N-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 09 . 1941



இறப்பு 13 . 02 . 2024

### சிங்காரம் சீவரத்தினம்

(மலரக்கா)

அல்லையம்பதி துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரம் சீவரத்தினம் நேற்று (13.02.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சிங்காரம் (ஓய்வுபெற்ற காலநிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி, பலாலி விமான நிலையம்) அவர்களின் பிரிய மனைவியும், ந.சியாமளா (பிரான்ஸ்), சி.தீனதயாளன் (ஓய்வுபெற்ற O.E.S, வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்), சி.திவாகரன் (அதிபர் - யா/வட்டு மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், த.நகுலேந்திரன் (பிரான்ஸ்), தி.செல்வராணி, தி. கீதாஞ்சலி (ஆசிரியர் - யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி (பிரான்ஸ்), அர்ச்சனா (பிரான்ஸ்), ஆதித்தன் (மூன்றாம் வருடம் பிரயோக விஞ்ஞான பீட மாணவன் - வவுனியா பல்கலைக்கழகம்), ஆதர்சினி (இரண்டாம் வருடம் விவசாயபீட மாணவி - யாழ். பல்கலைக்கழகம்), அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2024) புதன் கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
070 145 1728

தகவல்:
குடும்பத்தினர்

(Cr 1807) N-1

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும்.
இழுத்துப் பதிக்க ஒரு சதுர அடி - 100.00 ரூபா

077 334 1281

**வேலைக்கு ஆள் தேவை (பெண்)**

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நன்கு முன் அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை.

- வயதெல்லை 30 தொடக்கம் 40 வரைக்கும்
- வேலைநேரம் காலை 7.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
- மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

074 123 5110

(CS 27887) A-1

# நிறைவேற்றதிகாரம் ஒழிப்பு: திரைமறைவில் சூழ்ச்சிகள்!

### கம்மன்பில சுட்டிக்காட்டு




நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிக்கும் நடவடிக்கையின் பின்னால் உள்ள சூழ்ச்சிகளை விரைவில் அம்பலப்படுத்துவோம் என்று பிவிருது ஹெல உறுமயவின்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார். 'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைநீக்குதல் பற்றிய கருத்தாடலை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக ஜனாதிபதி ஆரம்பித்து வைத்துள்ளார். இதன் பின்னணியில் உள்ள சூழ்ச்சியை எதிர்காலத்தில் அம்பலப்படுத்துவோம்' - எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் என்பன முடிவடைந்தபின்னரே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமையில் கைவைக்கப்பட வேண்டும் எனவும், அதற்கு முன்னதாக இடம்பெறும் முயற்சிகளுக்கு தமது கட்சி ஒத்துழைப்பு வழங்காது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார். சில வேளை கட்சி ஆதரவு வழங்கினால்கூடஅதற்கு ஆதரவாக நான் கைதூக்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

(அ-ம-44)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 02 . 1951



மறைவு 13 . 02 . 2024

### திருச்சிற்றம்பலம் நவரத்தினம்

(இளைப்பாறிய அதிபர்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருச்சிற்றம்பலம் நவரத்தினம் நேற்று (13.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருச்சிற்றம்பலம் - நகுலாம்பிகை தம்பதிகளின் இரண்டாவது புத்திரனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - இராசம்மா தம்பதிகளின் மருமகனும், சிவகாமியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், ருமேஸ்குமார் (அவுஸ்ரேலியா), ரவிசங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைவாணி (அவுஸ்ரேலியா), மகநீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷயா, ஹரிபிரசாத், ஹேஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும், பாலச்சந்திரா, காலஞ்சென்ற சீவரத்தினம், தங்கராணி, யோகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாதேவி, வச்சலா, செல்லையாபிள்ளை, திருமதி கோபாலரட்ணம் மகேஸ்வரி, திருமதி பாலசுப்பிரமணியம் பூமணி, கணேசன், திருமதி வைத்திலிங்கம் - வசந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யானைக்குட்டி மதவடி,
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27889) N-1)

## மரண அறிவித்தல்

### ஈஸ்வரபாதம் தவமணி



தோற்றம் 21.05.1937

மறைவு 12.02.2024

யாழ்ப்பாணம் பரியாரிவளவு வல்வெட்டியை பிறப்பிடமாகவும், இராஜவீதி, கோப்பாய் வடக்கு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஈஸ்வரபாதம் தவமணி நேற்றுமுன்தினம் (12.02.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் ஈஸ்வரபாதம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாரட்ணம், மகாலிங்கம், புஸ்பவதியம்மா மற்றும் ருக்மணி (அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஸ்ரீறஞ்சினி, இராஜசுலோஜனா (நோர்வே), சற்குணராஜா (கனடா), ரவீந்திரராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேந்திரலிங்கம், யோகச்சந்திரன், மாலாதி, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிரூஜா, ஹீர்த்திகா, லக்ஷிகா, தினேஸ், நிஷாந்தி, அஜந், அனிசா, ஜனனி, அர்னி, சயூரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 786 6088 (ஸ்ரீ)
071 963 7130 (ரவி)

(Cs27788B) (N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# தாமதமான தீர்ப்பும் கற்கவேண்டிய பாடமும்

**தா**மதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமனானது. இந்தக் கூற்றை மெய்ப்பிப்பது போல ஒரு தீர்ப்பு வெளிவந்திருக்கிறது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்ட 10 பேருக்கு இரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும், ஒவ்வொருவருக்கும் தலா 5 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பிட்டிருக்கிறார் கண்டி மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஷிராணி விஜயசேகர. வரவேற்கத்தக்க, வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பே இது. ஆனால் பிரச்சினை என்னவெனில் குற்றம் நடந்து 13 வருடங்களுக்குப் பின்னரே இந்தத் தீர்ப்பு வெளிவந்தமையால் பலராலும் கவனிக்கப்படாமலேயே போய்விட்டது என்பதே யதார்த்தம்.

2011 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குச்சென்ற புகுமுக மாணவர் ஒருவர் மீது 10 பேர் கொண்ட சிரேஷ்ட மாணவர் கும்பல் ஒன்று அதீத பகிடிவதையை மேற்கொண்டது. அம்பாந்தோட்டையைச் சேர்ந்த வறிய குடும்பத்தில் இருந்த அந்த மாணவனுக்கு பல்கலைக்கழகச் சூழல் மிகப் புதிது. அத்தோடு மிகப் பயந்த சுபாவமும் கொண்டவன். அதை வைத்துத் தங்கள் வக்கிரத்தை சிரேஷ்டமாணவர் கும்பல் தீர்த்துக்கொண்டது. மாணவிகள் சூழ்ந்திருக்கும் இடத்தில் நிலத்திலே உணவைக் கொட்டிவிட்டு, அதனை நாய்போல கைகளைப் பயன்படுத்தாமல் வாயால் உண்ணச் செய்திருக்கிறார்கள். அதன் பின்னர் அந்த மாணவனை நிர்வாணமாக்கி, சிரேஷ்ட ஆண் மாணவர்கள் சிலரோடு பலவந்த ஓரினச் சேர்க்கைக்கும் உட்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு அந்த மாணவன் மறுக்கவே தங்களது விடுதிக் கூரையில் அவனைக் கட்டித் தொங்கவிட்டு அடித்திருக்கிறார்கள். இந்தப் பகிடிவதை தாங்கமுடியாமல் அந்த மாணவன் உயிர் மாய்க்கவும் முயன்றிருக்கிறான். அதன் பின்னரும் அந்தப் பகிடிவதைக் கும்பல் அவனை விடவில்லை. அடித்துக் காயப்படுத்தி இருக்கிறார்கள். அந்தக் காயங்களுக்கு அவன் சிகிச்சைபெறச் சென்றபோது, 'தவறுதலாக நிலத்தில் விழுந்தமையாலேயே காயங்கள் ஏற்பட்டன என்று மருத்துவரிடம் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் கொன்றுவிடுவோம்' எனவும் மிரட்டியிருக்கிறார்கள். ஆனால் தொடர்ச்சியாக அந்த மாணவன் ஒரேமாதிரியான காயங்களோடு வந்ததால், மருத்துவருக்குச் சந்தேகம் வந்து, மாணவனைத் தீர விசாரித்திருக்கிறார். அதன்போதே உண்மை வெளிவந்து, பகிடிவதை புரிந்தோர் கண்டறியப்பட்டு, கைதானார்கள். ஆனாலும் வழக்கு உடனடியாக முடியவில்லை. பல தவணைகளாக இழுபட்டு, குற்றம் நிகழ்ந்து 13 வருடங்களின் பின்னர், குறித்த சம்பவம் ஆறிய கஞ்சியாக எல்லோராலும் மறக்கப்பட்டு அதன் முக்கியத்துவம் இழக்கப்பட்ட நிலையிலேயே, இப்போது இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது.

இந்தத் தீர்ப்பு பகிடிவதை நடந்த 2011 ஆம் ஆண்டோ அல்லது அதற்கடுத்த வருடமோ சூட்டோடு சூடாக வந்திருந்தால், இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றையே மாற்றியமைத்திருக்கும். பகிடிவதைக்கு இவ்வளவு பெரிய தண்டனை கிடைக்கும் என்ற பயத்திலேயே பல பகிடிவதைகள் இல்லாமலேயே போயிருக்கும். ஆனால் காலங்கடந்து வந்த தீர்ப்பு பலரின் கவனத்தையும் ஈர்க்கத் தவறிவிட்டது. எனினும் காலங்கடந்தாலும், பகிடிவதைக் குற்றத்தில் இருந்து எவரும் தப்பமுடியாது என்ற உண்மையை இந்தத் தீர்ப்பு உரக்கச் சொல்லியிருக்கிறது என்பதையும் மறுக்கமுடியாது. குறித்த பகிடிவதையில் ஈடுபட்டவர்கள் இப்போது பட்டப்படிப்பையும் முடித்து அரசபணிகளில் இருக்கிறார்கள். அதிலும் சிலர் உயர்பதவிகளையும் வகிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் வந்திருக்கும் இந்தத் தீர்ப்பால் அவர்கள் தங்கள் பணியையும் இழக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. 'பகிடிவதைக் குற்றவாளிகள்' என அடையாளப்படுத்தப்பட்டதால், இனிமேல் அவர்கள் சமூகத்திலும், குடும்பத்திலும் தலை நிமிர்ந்து நடக்கவும் முடியாது. இந்தத் தீர்ப்பு பகிடிவதையில் ஈடுபடுவோருக்கு ஒரு பாடமாக அமையட்டும். எத்தனை வருடங்கள் கழிந்தாலும், ஊழ்வினை வந்து உறுத்தும் என்ற பயம் இருந்தால், பகிடிவதைகளும் தானே குறைந்துவிடும்.






## சிறைச்சாலைகளில் இனி தொழிற்சாலை

**கொழும்பு, பெப். 14**

**சிறைக்கைதிகள் சிறைச்சாலையிலிருந்து விடுதலையான பின்னர் அவர்கள் சமூகத்துக்குப் பயனுள்ளவர்களாக உருவாக்குவதை நோக்காகக்கொண்டு அனைத்து சிறைச்சாலைகளிலும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இதற்கென சிறைச்சாலை திணைக்களம் மற்றும் தொழில்துறை அபிவிருத்திச் சபைக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றுகைச்சாத்திடப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய மற்றும் தொழில்துறை அபிவிருத்திச் சபையின் தலைவர் சாரங்க அலகப்பெரும ஆகியோர் குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

தொழிற்சாலைகளில் பயிற்சி பெறும் கைதிகளுக்கு தொழில் அபிவிருத்திச்சபை மற்றும் சிறைச்சாலைத் திணைக்கள சான்றிதழ் வழங்கிவைக்கப்படும் என்றும் நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## போலி 'சிம்' வைத்திருந்தால் சிக்கல்

கொழும்பு, பெப்.14

மக்கள்தங்கள் அடையாள அட்டையைப் பயன்படுத்திப் பதிவு செய்த 'சிம்' அட்டைகளையே பயன்படுத்த முடியும் என்று தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

போலி 'சிம்' அட்டைகளைப் பயன்படுத்தி இடம்பெறும் சமூக விரோதச் செயல்களைக் கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை கடுமையாக்கப்படும் என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா பத்திரன தெரிவித்துள்ளார். (எ-இ)

## ரூ.124 கோடி நட்டம்

கொழும்பு, பெப்.14

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 124 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் இழப்பு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரலில் 664 கோடி ரூபாவை நெல் சந்தைப்படுத்தல் சபை கருவூலத்துக்குச் செலுத்தவில்லை என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## சிறுவர்களைக் காக்க 20 நிமிடக் குளியல்!

தற்போது நிலவும் வெப்பமான காலநிலைப் பாதிப்புகளில் இருந்து சிறுவர்களைக் காப்பதற்கு 20 நிமிடங்கள் குளிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போதுள்ள வெப்பமான காலநிலையில் தோல் நோய்கள் அதிகரித்து வருகின்றன. இந்தக் காலநிலை சிறுவர்களுக்குக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ள சிறுவர்களுக்குக் கூட இந்த நாள்களில் குளிப்பதற்கு வாய்ப்பளிக்கவேண்டும். சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவைகளாவது குளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். ஒருவருக்கு தோல் நோய்கள் இருப்பின் காலையிலும் இரவிலும் சுமார் 20 நிமிடங்களேனும் நீரில் இருப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-இ)

## தரமற்ற மருந்து இறக்குமதி: சி.ஐ.டி.யினர் வாக்குமூலம்

கொழும்பு, பெப். 14

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் சுகாதாரத்துறையிலுள்ள உயர் அதிகாரிகள் பலரிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் மருந்து விநியோகத் திணைக்களத்தின் பிரதிநிதிகளிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதேவேளை, குறித்த இம்யூனோகுளோபுலின் தடுப்பூசியை இறக்குமதி செய்தமை தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### நாளை

15.02.2024
வியாழக்கிழமை
மாசி– 03

சுபநேரம் : 08.03 - 09.33
ராகுகாலம் : 02.03 - 03.33

ஷஷ்டி விரதம்

### நாளொரு நல்வார்த்தை

நேற்றிலிருந்து கற்றுக்கொள்
இன்றைக்காக வாழ்
நாளை மீது நம்பிக்கை வை...!

– அல்பர்ட் ஐன்ஸ்டீன்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RE/MAX NORTH REALTY

# RE/MAX NORTH REALTY 7ஆவது வருடத்திலும், RE/MAX NOBLE REALTY 3ஆவது வருடத்திலும் கால்த்தடத்தை பதிக்கிறது.



இலங்கையைப் பூர்வீகமாகவும் கனடா வாழ் தமிழராகிய திரு.லதன் வரதராஜா அவர்களால் நிர்வாகிக்கப்படும் RE/MAX NORTH REALTY இன் 6வது ஆண்டு நிறைவு விழாவும், திருகோணமலையில் நிர்வாகிக்கப் படும் RE/MAX NOBLE REALTY 2வது ஆண்டு நிறைவு விழாவும் கடந்த 10.02.2024 சனிக்கிழமை அன்று வெகு விமர்சையாக NORTH GATE RESORT இல் நடைபெற்றது.

இந் நிறைவு விழாவில் விருந்தினர்களாக சபரீச ஐயப்பன் உபாசகர் திரு.சிவகிரி ஹறிஹரசுத சிவாச்சாரியார், கலாநிதி அகிலன் முத்துக்குமார சுவாமி, திரு. சுகந்தன் சண்முகானந்தன், திரு. தமிழ் சுப்பிரமணியம், திரு. திலக் ராஜகுமார், திருமதி. வரதராசா புவனேஸ்வரி மற்றும் செல்லையா வரதராசா, திருமதி. ரஜீலாதேவி வல்லிபுரநாதன் போன்ற சிறப்பு விருந்தினர்களும் கலந்துகொண்டனர்.



இந் நிகழ்வில் குறித்த நிறுவனத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் நடந்தது.

இதன்படி திருகோணமலை கிளையின் பணியாளர்களுக்கு ROOKIE OF THE YEAR விருது கீர்த்தனா தினேசுக்கும், MOST TRANSACTIONS OF THE YEAR விருதினை ருத்திரன் காமராஜ்க்கும், TOP LISTER விருதினை நிரஞ்சன் செல்வராஜீக்கும், ருத்திரன் காமராஜீக்கும், OUTSTANDING ACHIEVEMENT விருதினை கீர்த்தனா தினேஷ்க்கும், TOP PRODUCER விருதினை ருத்திரன் காமராஜ்க்கும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கிளையின் பணியாளர்களுக்கு ROOKIE OF THE YEAR விருது பிரேசன் ஜான்சனிற்கும், BEST ADMINISTRATIVE OFFICER சர்மிளா லக்ஸ்மனிற்கும், MOST IMPROVED REALTOR மித்திரன் திருக்கேஸ்வரனிற்கும், OUTSTANDING REALTOR விருது கெமன் ராஜேஸ்வரனிற்கும், பிரேசன் ஜான்சனிற்கும், OUTSTANDING REALTOR விருது ஜனா நிர்மலக்குமாரிற்கும், MOST TRANSACTIONS OF THE YEAR திவாகர் தவவிநாயகனிற்கும், MOST TRANSACTIONS OF THE YEAR சர்மிளின் ரஜீவனிற்கும், TOP LISTER விருதினை பிரேசன் ஜான்சனிற்கும், OUTSTANDING ACHIEVEMENT விருதினை திவாகர் தவவிநாயகனிற்கும், TOP PRODUCER விருதினை சர்மிளின் ரஜீவனிற்கும் வழங்கப்பட்டது.

மேன்மேலும் அவர்கள் பல ஆண்டுகள் வளர்ச்சியடைய வாழ்த்துக்கள்.

## பகவத்கீதை மஹோற்சவம் இம்முறை இலங்கையில்

கொழும்பு, பெப்.14

சர்வதேச ஸ்ரீமத் பகவத்கீதை மஹோற்சவத்தை இந்தமுறை இலங்கையில் நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த மஹோற்சவம் மார்ச் முதலாம் திகதி முதல் மார்ச் 3 ஆம் திகதிவரை கொழும்பு தாமரைத் தடாக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்து பக்தர்களின் புனித நூலாகக் கருதப்படும் ஸ்ரீமத் பகவத்கீதை தொடர்பாக சமய நிகழ்வுகள் மற்றும் ஸ்ரீமத் பகவத்கீதைக்கு வணக்கத்துக்குரிய மதிப்பளித்தலை வழங்குவதற்காக இந்தியாவின் ஹரியானா மாநில குருப்பிரிவு அபிவிருத்திச் சபையால் வருடாந்தம் பகவத்கீதை மஹோற்சவம் நடத்தப்படுகின்றது. அண்மைய ஆண்டுகளில் இந்த மஹோற்சவம் வெளிநாடுகளில் நடத்தப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டின் சர்வதேச ஸ்ரீமத் பகவத்கீதை மஹோற்சவத்தை இலங்கையில் நடத்துவதற்கு முன்மொழியப்பட்டு ள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர் சமர்ப்பித்த மேற்படி முன்மொழிவுக்கு க்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-44)

## மண்வெட்டிப் பிடி தயாரிக்க மரம் வெட்டிய ஒருவர் கைது



யாழ்ப்பாணம், பெப்.14

விண்ணாங்கு மற்றும் காயா மரக்கட்டைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் புதுக்குடியிருப்பு வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வள்ளிபுனத்தில் விண்ணாங்கு மற்றும் காயா மரங்களைச் சட்டவிரோதமான முறையில் வெட்டி மண்வெட்டிப் பிடி தயாரிக்கப்படுகின்றது என்று புதுக்குடியிருப்பு வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 50 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மரக்கட்டைகளும் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-125)

## கோத்தாபய ஓடியதை மறந்துவிடக் கூடாது

### நினைவுபடுத்தும் மைத்திரி

கொழும்பு, பெப்.14

தேசியப் பாதுகாப்பை ஏற்படுத்துவேன் எனக்கூறி ஆட்சிக்குவந்த கோத்தாபய ராஜபக்ச தனது பாதுகாப்பைக்கூட உறுதிப்படுத்த முடியாமல் பதவி துறந்து, நாட்டைவிட்டு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்கள் உள்ளனர், 25 அணிகளாக உள்ளனர். காலையில் ஒருகட்சி, மாலையில் இன்னொரு கட்சி என்ற நிலைமையும் காணப்படுகின்றது. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்சவின் பிரதான பிரசாரம் என்னவாக இருந்தது? தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன் எனக் கூறினார்.

இறுதியில் என்ன நடந்தது? அவர்களுக்கு அவர்களின் பாதுகாப்பைக்கூட உறுதிப்படுத்த முடியாமற்போனது. பதவி துறந்து நாட்டை விட்டுத் தப்பியோடினர். அரச தலைவர் இல்லாமல் 3 நாள்கள் நாடு இருந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது பற்றிப் பேச்சு இடம்பெறுகின்றது. அதனால் முதலில் எந்தத் தேர்தல் என்பது குழப்பமாகவே உள்ளது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## முறையற்ற அபிவிருத்தி விவசாயத்துக்குப் பாதிப்பு

வலிகாமம் மேற்கில் தற்போது இடம்பெறும் முறையற்ற வீதி அபிவிருத்தி காரணமாக அடுத்த போகத்துக்கான விவசாயத்தை கைவிடவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போது, "மாவடி - மூளாய் வீதி வடிகால் அமைக்கப்படவில்லை.

இதனால் விவசாயத்துக் கான தண்ணீர்ப் பிரச்சினை உட்பட கடலை நோக்கி மேலதிக நீர் செல்லுதல் ஆகிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. சித்தன்கேணி சந்தி முதல் அராலி சுழிபுரம் சந்தி முதல் பொன்னாலை வீதி உயர்த்தப்படுகின்றது. இங்கும் முறையான வடிகால் இல்லையென்றால் நாம் என்ன செய்வது?" என்று வலிகாமம் பிரதேச விவசாயிகள் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த பிரதேச செயலர், வீதி அபிவிருத்தி அதிகார சபையைக் கேட்டால், அது பிரதேசசபைக்குரிய பொறுப்பு எனக் கூறுகின்றார்கள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை கருத்துத் தெரிவித்த பிரதேச பொறுப்பு வாய்ந்த விவசாயத் திணைக்கள அதிகாரி வட்டுக்கோட்டைப் பிரதேசத்துக்கு வீதி அபிவிருத்தி காரணமாக முறையான வடிகால் இல்லை என்பதோடு நீரோட்டமற்ற பகுதியாக மாறியுள்ளது. இதன் மூலம் சடுதியான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பற்ற செயற்பாடே இதற்குக் காரணம் என்று குறிப்பிட்டார். (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> **“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
> பெற்றான் பொருள்வைப் புழி”**
>
> **பொருள்:** வறியவரின் கடும்பசியைத் தீர்க்கவேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.
>
> **- வள்ளுவர்**



■ அபிமன்யு

# வில்லிசை கலையின் அழிவு தமிழ்ச் சமூகத்தினது தோல்வி

முதுபெரும் கலைஞர் இராசையா ஸ்ரீதரனின் அனுபவப்பகிர்வு

முன்னொரு காலத்தில் ஈழத்த ர்களால் பெரிதும் விரும்பப்பட்ட வில்லுப்பாட்டு கலையின் வீச்சு தற்போது மெல்லக்குறைந்து வருகின்றது. குறைந்து வருகின்றது என்பதை விட அழிந்து வருகின்றது என்று சொன்னால் அதில் விவாதப்பொருளொன்று இல்லை. இந்த நிலையில் வில்லுப்பாட்டுக்கலையின் எழுச்சி தொடர்பிலும் அதன் செல்நெறி தொடர்பிலும் விளக்குகின்றார் யாழ்ப்பாணத்தின் முதுபெரும் வில்லிசைக் கலைஞர்களில் ஒருவரான கலா பூஷணம் இராசையா ஸ்ரீதரன் அவருடனான செவ்வியே இது.

**கேள்வி: நீங்கள் எப்படி வில்லுப்பாட்டு கலைக்குள் பிரவேசித்தீர்கள்?**

**பதில்:** அது ஒரு பெரிய கதை. 1967ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி அரசடிப்பிள்ளையார் கோயிலின் சிவராத்திரி விழாவில்தான் என்னுடைய முதல் நிகழ்ச்சி அரங்கேறியது. அது எவ்வாறு நிகழ்ந்ததெனில், அந்த ஆலயத்தில் இளைஞர் மன்றம் ஒன்று செயற்பட்டு வந்தது. நானும் அதில் அங்கம் வகித்தேன்.

சிவராத்திரி விழாவுக்கு ஒரு வில்லுப்பாட்டு வேண்டும் என்று பலவிதத்திலும் முயன்றார்கள். அப்போதிருந்த பொருளாதாரக் கஷ்டத்தில் காசு கொடுத்து வில்லுப்பாட்டு பிடிக்க முடியவில்லை. நானும் எனது நண்பர்களும் உரையாடியதைச் செவிமடுத்த எனது தந்தையார் வேறு வில்லுப்பாட்டு பிடிக்கவேண்டாம். நீங்களே ஒரு வில்லுப்பாட்டைச் செய்தால் என்ன? என்று அடி எடுத்துக் கொடுத்தார். உடனே என் நண்பர்கள் “அண்ணா! இது நீங்கள் செய்யக் கூடியது இன்றே எழுதத் தொடங்குங்கள்” என்று ஊக்கமளித்தனர். உடனே “பக்த நந்தனார்” என்ற தலைப்பில் ஒரு வில்லுப்பாட்டை எழுதி முடித்தேன். அதுதான் என்னுடைய முதல் வில்லிசை.

என்னுடைய நண்பர்களையும் சேர்த்து ஆறு தடவைகள் ஒத்திகையும் பார்த்து நன்கு பழகிக்கொண்டு சிவராத்திரியன்று மேடையேறினேன். நிகழ்ச்சி ‘ஓஹோ’ என்று அமைந்துவிட்டது. எல்லோரும் ‘பிரமாதம் பிரமாதம்’ எனப் பாராட்டுத் தெரிவித்தனர். அதுமட்டுமன்றி “இதை இப்படியே விட்டுவிடாமல் தொடர்ந்து குழுவாகச் செயற்படுங்கள்” என்று ஆக்கமும் ஊக்கமும் அளித்து ஆலோசனைகளையும் வழங்கினர். அன்று தொடங்கி இன்றுவரைக்கும் வில்லிசையைச் செய்து வருகின்றேன்.

என்னுடைய குரு கதாப்பிரசங்கமணி வீ.எஸ்.கணேசசுந்தரம் ஆவார். அவர் தன்னுடன் என்னையும் அழைத்துச் சென்று வில்லிசையில் நகைச்சுவையாக பேச வைத்து முன்னணிக்கு இட்டுச் சென்றார். இப்படியிருக்கும் நாளில் திருப்பூங்குடி வி.கே.ஆறுமுகம் ஆசிரியர் தமது வில்லிசைக்கு ஆள்குறையும் பட்சத்தில் என்னை அந்த இடத்துக்கு நிரப்பிக் கொள்வார். அவரோடு பல நிகழ்ச்சிகள் செய்திருக்கின்றேன். அதன் பின்னர் சுதுமலை கலைமணி எஸ்.வடிவேல் தனியாக ஒரு குழு அமைத்து வில்லிசை செய்துவரும் நாளில் என்னையும் இணைத்துக் கொண்டார். பின்பு சின்னமணி என அழைக்கப்படும் கலாவிநேசன் கணபதிப்பிள்ளையும் தனக்கு ஆளில்லாத நேரத்தில் என்னைப் பயன்படுத்தினார். மேலும் தேவி வில்லிசைக் குழுவின் எஸ்.சோமாஸ்கந்த சர்மாவும் தன்னுடைய நிகழ்ச்சிகளுக்கு என்னையும் ‘ஆமா’ போடச் சேர்த்துக் கொண்டார்.

இவர்களுடன் நிகழ்ச்சி செய்த அனுபவமே என்னை இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது. ஆரம்பத்தில் எனக்கு வில்லுப்பாட்டு செய்வதற்கு வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன. பின்பு கொஞ்சங் கொஞ்சமாக முன்னேற்றங் கண்டு வளர்ந்து இன்று ‘ஸ்ரீதர் வில்லிசைக்குழு’ என்று ஒரு குழு அமைத்து வில்லிசையை வளர்த்து வருகின்றேன்.

**கேள்வி: நீங்கள் வில்லிசை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டபோது ஏற்பட்ட சுவாரஷ்யமான அனுபவங்கள் தொடர்பில் தெரிவிக்க முடியுமா? அவ்வாறான அனுபவங்கள் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா...?**

**பதில்:** நிறையவே உண்டு. ஒருமுறை அருணகி லாற்றை வில்லிசைத்துப் பாடும்போது சம் பந்தாண்டான அம்பாளை வழிபடும் சந்தர்ப்பத்தில் நான் வேகமாக வில்லிசைத்துப் பாடினேன். எனக்கு புதியதோர் உற்சாகம் வந்துவிட்டது. நன்றாக ரசித்து ருசித்துப்பாடினேன். நல்ல மேல்ஸ்தாயியில் பாடுகையில் வில்லிசை களைகட்டிவிட்டது. எமது வில்லிசையைக் கேட்டுக் கொண்டிருந்த ஓர் ஆண்மகனுக்கு உருவேறிவிட்டது. நன்கு உணர்ச்சி ததும்ப நடனம் ஆடியபடி துள்ளித் துள்ளி வட்டமிட்டு ஆடினார்.

நானும் விடவில்லை பாடிக்கொண்டேயிருந்தேன். அவரும் விடாமல் ஆடிக்கொண்டே இருந்தார். அனைவரும் வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ‘உருவேறத் திருவேறும்’ என்பார்கள். அந்த வகையில் நானும் என்னை மறந்து பாடிக்கொண்டே வில்லடித்து உருவேற்றினேன். எல்லோரும் கைதட்டி ஆரவாரஞ் செய்தார்கள். இது ஒரு மறக்கமுடியாத நிகழ்ச்சி. நானும் என்னை மறந்துவிட்டேன். ஆடியவரும் நன்கு ஆடினார். அம்பிகையின் அருட்கடாட்சம் எனக்குக் கிடைத்ததற்கு இது ஒரு சான்றாகும்.



**கேள்வி: இதுகால் வரைக்கும் எத்தனை வில்லிசை நிகழ்ச்சிகளைச் செய்திருக்கின்றீர்கள்?**

**பதில்:** வில்லிசைக் கலைஞர்களான திருப்பூங்குடி ஆறு முகம், வீ.எஸ்.கணேசசுந்தரம், கலைமணி எஸ்.வடிவேலு சின்னமணி, க.நா.கணபதிப்பிள்ளை, தேவி எஸ்.சோமஸ்கந்த சர்மா ஆகியோருடன் நான் செய்த நிகழ்ச்சிகள் கணக்கிடமுடியாது. ‘ஸ்ரீதர் வில்லிசை’ என்ற குழுவின் மூலமாக இதுவரை அறுபத்து நான்கு நிகழ்ச்சிகள் செய் துள்ளேன்.

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலத்தின் பாதையில் இல்லார்க்கு இரங்குவோம்!



அனைத்துலக கிறிஸ்தவ மக்களும் இன்றைய திருநீற்றுப்புதன் திருவழிபாட்டுத் திருப்பலிச் சடங்குடன் மீண்டுமொரு தவக்காலத்தினுள் நுழைகின்றனர். தவக்காலத்தின் நோக்கமானது கிறிஸ்து மனித விடுதலைக்காக பாடுகள், மரணத்தை ஏற்று உயிர்ப்பின் வழியாக புது வாழ்வைத் தந்த தியாகத்தை சிரம்தாழ்த்தி நினைவேந்தி எம்மைத் தயார்ப்படுத்துவதாகும்.

இந்தத் தவக்காலமானது வருடாவருடம் வந்துபோகும் ஒரு கொண்டாட்டமல்ல. எமது கடந்த கால பயணத்தை சீர்தூக்கிப் பார்த்து, நின்று நிதானித்து முடிவெடுக்க அழைப்புவிடுக்கும் மனமாற்றத்தின் காலமாகும். இறைவன் விசேட விதமாக எம்மீது இரக்கத்தைப் பொழிய எம் மத்தியில் பிரசன்னமாகும் அருளின் காலமாகும். தவக்காலம் ஒப்புரவின்காலம், மீட்பின் காலம் என்றும் அழைக்கப்படுகிறது.

முழு உலகத்தையும் போர்மேகங்கள் சூழ்ந்து பேரழிவுகளை ஏற்படுத்துமோ என்ற அச்சம், விலைவாசி உயர்வு, அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளால் ஏற்பட்ட வாழ்வாதார நெருக்கடி, இனவெறி, மொழிவெறி, நிறவெறி என பலமுனைத் தாக்கங்கள் மத்தியில் நாம் சந்திக்கும் இந்தத் தவக்காலம் தகுந்த முறையில் நோன்பை அனுசரிக்க சந்தர்ப்பங்களைத் கைகொடுப்பதே காலத்தின் தேவையாக அமைகிறது.

விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி, வாழ்வாதாரப் போராட்டம், திட்டமிட்ட போதைப்பொருள் தாக்கம், நிலநடுக்கப் பேரழிவுகள், உரிமை மறுப்பு போன்ற பலமுனைத் தாக்கங்கள் மத்தியில் நாம் முன்னெடுக்கவுள்ள இந்தத் தவக்காலம் மன்னிப்பு, தியாகம், பகிர்வு, செப உதவி, களப்பணி போன்றவற்றில் நாம் ஈடுபட நல்ல சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. தவம் என்பது காவியுடை தரிப்பதும் முகவாட்டமாக இருப்பதும் அல்ல. மாறாக இதயத்தை உடைப்பது. அதிலிருந்து அன்பு, பரிவு, இரக்கம், மன்னிப்பு, சமத்துவம் பகிர்வு போன்றவற்றை பிறர் சுவைக்கக் கொடுப்பது. இல்லார்க்கும், இயலார்க்கும் கைகொடுப்பது. ஆசைவலைகளில் அகன்று வேடமில்லா, கபடமில்லா இன, மத, பேதமில்லாவாழ்வு வாழ்வது. ஆனால், நாம் பகட்டிலும், ஆடம்பரத்திலும் சமூக கௌரவம் தேடி மாயச் சிந்தனையில் மயங்கிக் கிடக்கின்றோம். ஆடம்பரம் அகற்றி அளவோடு அனுபவித்து, எளிமையைக் கடைப்பிடித்து, எழைகளைத் தாங்கி நிற்பதே உண்மையான தவம் என உணரத் தவறிவிடுகின்றோம். ஈதல், இறைவேண்டல், நோன்பிருத்தல் ஆகிய செயல்களைப் புதிய கோணத்தில் முன்னெடுக்க அழைக்கும் இயேசுவின் பார்வையை எமதாக்குவோம்.

பக்திச் செயல்கள் தம்பட்டம் அடிப்பதற்கல்ல. எமக்குள் எம்மைத் தேடி நான் என்ற மன நிலையைவிட்டு நாம் என்ற பொதுநிலைக்கு எம் ஒவ்வொருவரையும் கொண்டுவரத் தேவையான அருமருந்து அவை என்றுணர்வோம். நம் அக ஆன்மிகம் இயேசுவின் ஆன்மிகமாகி நம்மில் ஒளிரட்டும். என் உடன் வாழ்வோர் சமூகத்தோர், திருஅவை, நாடு, உலகம் என்ற பார்வையில் மகிழ்ச்சியும், உயர்ச்சியும், அமைதியும், சமத்துவமும் உருவாக என்னையே சாம்பராக்க சம்மதிக்கின்றேன் என்பதன் அடையாளமாக இன்று நெற்றியில் ஏற்ற தவத்தலத்தின் மீது உறுதியுரை எடுத்துச் செயலாற்ற முயற்சிப்போம்.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை

---

(தொடர்ச்சி)



# வில்லிசை...

**கேள்வி: சிறந்த வில்லிசைக் கலைஞரான நீங்கள் எப்படித் தேவாரத்துக்குள் பிரவேசித்தீர்கள்?**

**பதில்:** ஒருமுறை நான் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் நடந்த சேக்கிழார் விழாவுக்குத் தேவாரம் பாடச் சென்றிருந்தேன். அப்போது அங்கே தேவாரக் கச்சேரி கேட்டேன். அன்றைக்கு எனக்கு ஆசை ஏற்பட்டுவிட்டது. நானும் இவ்வாறு செய்தால் என்ன? எனச் சிந்தித்துக் கொண்டே யாழ்ப்பாணம் வந்தேன். பலமுறைகள் விடாமுயற்சி எடுத்து தேவாரப் பாடல்களை நன்கு சாதகம் செய்து நயினாதீவு பிள்ளையார் கோயிலில் முதன்முறையாகத் தேவாரக் கச்சேரி செய்தேன். எல்லோரும் நன்றாக இருக்கிறது என்று பாராட்டினார்கள். அதிலிருந்து திருமுறைபாடி வருகின்றேன். லண்டன் மாநகரில் இருந்து வந்த் ஒருவர்மூலம் இசைத்தட்டும் வெளியிட்டேன்.

**கேள்வி: எமது 'உதயன்' பத்திரிகை வாசகர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**




பதில்: புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் நாங்கள் நீர்க்குமிழிக்கு நிகரான இந்த உடம்பை வளர்க்கப் பாடுபடாமல் உடலில் உயிர் இருக்கும் போதே நல்லன எல்லாவற்றையும் செய்துவிடவேண்டும். எமது உடம்பிலிருந்து உயிர் பிரிந்துவிட்டால் 'சிவம் சிவம்' என்றவர்கள் சிவத்திலுள்ள 'சி' விசிறியை நீக்கிவிட்டு 'சவம் எப்போது எடுக்கிறார்கள்?' என்றுதான் கேட்பார்கள். ஆகவே "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை மனதிற்கொண்டு நலமுடன் வாழவேண்டும். வாழும் காலத்திலேயே நாம் இறைதொண்டு செய்ய வேண்டும். 'அன்பே சிவம்' என்பதற்கிணங்க நாம் எல்லோரிடமும் அன்பாகப் பழகவேண்டும். "சிரிப்பு சிறந்த மருந்து" என்பது வில்லிசை மூலம் கிடைக்கும் அருமருந்து. "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும்" என்பது முதுமொழி ஆகவே நாங்கள் எல்லோருடனும் சிரித்துச் சிரித்துப் பேசிப்பழகிக் கொள்ளவேண்டும். சிடு மூஞ்சியாக இருக்கவே கூடாது.

ஒவ்வொருநாளும் குளித்து நெற்றியில் 'வீபூதி' அணிந்து வீட்டிலுள்ள சுவாமி அறையில் ஒரு தேவாரமும் புராணமும் பாடுகின்ற பழக்கத்தையே வழக்கமாகக் கொள்ளவேண்டும். சைவநாயன்மார்கள் அருளிச் செய்த தேவாரம் ஓர் அருமையான பொக்கிஷம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இப்படிச் செய்து வந்தால் இல்லத்தில் மங்களம் உண்டாகும். சுபீட்சம் தானாகவே வந்து சேரும், நல்ல வாழ்க்கையும் அமையும்.

ஒரு தென்னை மரத்தைப் பார்க்கின்றோம். அதிலே தென்னோலை இருந்ததற்கான ஒரு வரைவு அதாவது அடையாளம் இருக்கும்.

அதேபோல மனிதனும் தான் இவ்வுலகில் வாழ்வதற்கான ஓர் அடையாளத்தை விட்டுச்செல்ல வேண்டும். அது தான் மனிதனுக்குப் பெருமை சேர்க்கும். இதை ஒவ்வொரு மனிதனும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

**கேள்வி: வில்லிசைக் கலை தற்போது எதிர்கொள்ளும் சவால்கள் எவை? தற்போது வில்லிசைக் கலை அதே செல்நெறியில் பயணப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்று கருதுகின்றீர்களா?**

**பதில்:** வில்லிசை முன்னையகால செல்நெறியில் தற்போது பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று சொன்னால், அது 'முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பது' போன்றாகும். ஏனெனில், முன்னொரு காலத்தில் பலதரப்பட்ட மக்களையும் கவர்ந்திழுந்த இந்தக் கலை தற்போது தேடுவாரற்றுக் கிடக்கின்றது. நிகழ்ச்சிகள் குறைந்துவிட்டன. வில்லிசை மேடையேற்றங்கள் இடம்பெறுவது இப்போது குதிரைக் கொம்பாகிவிட்டது. நான் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் உள்ள பலநூறு வில்லிசைக் கலைஞர்களின் வாழ்வை மெல்லமெல்ல இருள் கௌவிக் கொண்டிருக்கின்றது. எமது இசை வாழ்வு மலர்ச்சியுற வேண்டுமென்றால் உள்ளூர் கலைஞர்களை ஊக்குவிக்க அவர்களை வைத்து நிகழ்ச்சிகளை நடத்த அரச திணைக்களங்களும், தனியார் ஒழுங்கமைப்பாளர்களும் முன்வர வேண்டும். ஆனால், பாரம்பரிய கலைகளைப் புறந்தள்ளி அதீத மேற்கத்தேய இசைக் கலாசாரத்துக்கே தற்போது முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. வில்லிசையின் மறுவருகைக்கும், அதன் உயிர்ப்புக்கும் காலம்தான் பதில்சொல்லவேண்டும். ஆனால், யதார்த்தப்பூர்வமாக அணுகினால் வில்லுப்பாட்டு காலக் கிரமத்தில் அழிந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வில்லிசை என்பது பெரும் கலை. அது அழிவடைவதென்பது ஒரு சமூகத்தின் அதுவும் தமிழ்ச் சமூகத்தின் தோல்வியாகவே அமையும். ஆதலால், இளைஞர்களே, யுவதிகளே அனுதினம் மேற்கத்தேய கலாசாரத்தின் பின்னால் ஓடிக்கொண்டிருக்காமல் எங்களின் சுதேச கலைகளையும் பழகிக்கொள்ளுங்கள். தலைமுறைகள் தாண்டி இந்தக் கலை பரிணமிக்க வேண்டுமாயின் கலைகள் ஊடுகடத்தப்படுவது அவசியமாகும். ஆனால் இங்கு யாரைவைத்து அடுத்த சந்ததிக்கு ஊடுகடத்துவது என்ற கேள்வி எழுகின்றது. இந்தக் கேள்விதான் சுதேச கலைகள் அழிவை எதிர்கொள்வதன் அறிகுறியாகவும் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே நிறைவேற்று அதிகாரம் நீக்கம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.14

ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப் படும், அத்தேர்தலின் பின்னரே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது பற்றி ஆராயப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மாற்றப்பட வேண்டுமா? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்கவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கு நேரடிப் பதிலை வழங்கினால் தேர்தலை ஒத்தி வைக்கும் முயற்சி எனக் கூறப்படலாம். தற்போது கட்டாயம் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது நல்லது. ஆனால் தேர்தலின் பின்னரே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அரசமைப்பின் பிரகாரம் கட்டாயம் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-44)




# காதலர் தினத்தை முன்னிட்டு பரிசுகள் விற்பனை அமோகம்

யாழ்.பெப். 14

காதலர்தினத்தை முன்னிட்டு பரிசுப்பொருள்கள் விற்பனை வடக்கு மாகாணத்தில் பரவலாக நேற்றுச் சூடுபிடித்திருந்தது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிறப்புக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு இந்தப் பொருள்கள் விற்கப்பட்டன. (ம-27)




## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 16.01.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர்.**
**பரராஜசேகரம் சிவநாதன் (ரத்தி) (SM)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.02.2024) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (15.02.2024) வியாழக்கிழமை 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி, மீசாலை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

(CS 27899) A-1

## மரண அறிவித்தல்



**நவரத்தினம் ரூபவதி**

யாழ். கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் இல.63/3. கணேசபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட ரூபவதி அவர்கள் நேற்று (13.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும். அமரர் குணரத்தினம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும். அமரர் வல்லிபுரம் தங்கம்மா தம்பதியரின் மருமகளும். யோகவதனி (கணேசபுரம்). கிருஷ்ணவேணி (கிச்சா) திருவையாறு. இந்திரகுமார் (உரும்பிராய்). ஜெயக்குமார் (சுவிஸ்). உதயகுமார் (நோர்வே). ஜெயந்தினி (கணேசபுரம். ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். நாகரத்தினம் (பாப்பா). காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் ரஞ்சினி (உரும்பிராய்). சுதாஜினி (பாமா-சுவிஸ்). ரதிவேல் நாயகி (நோர்வே). பிரேம்குமார் (அதிபர். கிளி/ ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். சறோஜினிதேவி (கணேசபுரம்). காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும். மிருணாளினி (யாழினி-லண்டன்). அமரர் நிரூஜன் விதுர்சன் மற்றும் தினோத் (பிரான்ஸ்). ரிதுர்சன் (ஷான் ஸ்ரூடியோ அன் பான்சி A-9 வீதி. கிளிநொச்சி. லதுசன் தனுசன் (நோர்வே). ஜென்சிகா ஜெதுர்சன் (சுவிஸ்). றமனதாசன் (லண்டன்). செரின் (பிரான்ஸ்). கிசி (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியாரும். அக்சயன் அஸ்விதன் (லண்டன்). திஷா நிரா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கணேசபுரம் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ந.இந்திரகுமார் - 0776152345
மு.பிரேம்குமார் - 0777115896

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சுந்தரமூர்த்தி சிவசூரியன்**

குடாரப்பு நாகர்கோயிலை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி மற்றும் சென்னை வளசரவாக்கத்தை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி சிவசூரியன் அவர்கள் கடந்த (09.02.2024) அன்று அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி- ஸ்ரீரஞ்சனிதேவி தம்பதியரின் மகனும், சிவானந்தம்-சகுந்தலாதேவி தம்பதியரின் மருமகனும், ஸ்ரீமதியின் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (MV House, No-04, Sri Lakshmi Nagar Main Road, Valasaravakkam Chennai-600 087) இடம்பெற்று போரூர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27900) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 11 . 1943



மறைவு
10 . 02 . 2024

### Dr. பொன்னம்பலம் இராமநாதன்

(ஓய்வு நிலை சிரே ஸ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல சித்த வைத்தியர் பொன்னம்பலம் இராமநாதன் 10.02.2024 சனிக்கிழமை, இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவடியைச் சேர்ந்த பிரபலசித்த வைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமு வைத்தியர்) கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான உடுவிலைச் சேர்ந்த வல்லிபுரம் இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கலைவாணி (ஓய்வுநிலைப் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புக் கணவரும், பரந்தாமன் (Cardiac Physiologist, Newzealand) , பிரகலாதன் (Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும், பபிதா (Newzealand) Dr.கிருசானி ஆகியோரின் அன்புமாமனாரும் ஸ்ரீராம், லக்ஸ்மன், ஆதித்தியன் ஆகியோரின் அன்புபேரனும் Dr.ஆறுமுகராஜா (UK), Dr.விவேகானந்தன் (UK), புவனேஸ்வரி (India), ஈஸ்வரி (Colombo) மற்றும் காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாசவன் (Colombo), மோகன் (Germany), கலாராணி (Canada), உசாலினி (Germany), கயல்விழி (Canada), தசவரதன் (Canada) மற்றும் காலஞ்சென்ற ஆதவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2024 நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தாவடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வீதி,
தாவடிசந்தி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41805) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 01 . 1943



மறைவு
13 . 02 . 2024

### அமிர்தலிங்கம் நகுலேஸ்வரி

யாழ். இராசாவின் தோட்டம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் நகுலேஸ்வரி அவர்கள் நேற்று (13.02.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சி. அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான அன்னலக்சுமி, தனலட்சுமி, தனேஸ்வரி, பரமேஸ்வரி, ஜெயரட்ணம், குணசேகரம் மற்றும் பேரின்பநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவயோக ராஜா, ஆனந்தராஜா, இரட்ணராஜா, சாந்தி, நிர்மலா, செந்தில்ராஜா, சிவானந்தராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், பவானந்தி, விரஜா, சுபத்திரா, இரவீந்திரன், செல்வமுருகன், சுகந்தி, ஜயந்தி ஆகியோரின் அன்பு மாமியும், பேரப்பிள்ளைகளின் அன்புப் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2024) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

இல. 131/1,
இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
செல்வமுருகன் - மருமகன்
Mobile: +94754161490
இரவீந்திரன் - மருமகன்
Mobile: +94773432422

(CS 27896) A-1

## மரண அறிவித்தல்



### திருமதி பூபதிப்பிள்ளை (அன்னலஷ்மி) கதிரவேலுப்பிள்ளை

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் நல்லூர், அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட பூபதிப்பிள்ளை (அன்னலஷ்மி) கதிரவேலுப்பிள்ளை அவர்கள் கடந்த (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் காலமானார்.

அன்னர் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை அவர்களின் மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசமணி, திருச்செல்வம், நாகரத்தினம், இராசதுரை ஆகியோரின் சகோதரியும், வசந்தா, வனஜா, வானதி, கிரிதரன் ஆகியோரின் தாயாரும், காலஞ் சென்ற திருஞானசம்பந்தர், ஆனந்தகுமாரன், மகாநாதன், Michel ஆகியோரின் மாமியாரும் கஸ்தூரி, குருபரன், கார்த்திகா, சங்கீதா, பாலமுருகன், சாம்பவி, சுமந்திரன், கௌரங்கன், Andrew, Ashley ஆகியோரின் பேர்த்தியும் சிவானி, வைதேகி, யாதவன், பிரியன், அதீஸ், நிவாசினி, அஞ்சனா, அனுப்பிரியா, ஆராதனா, கயிலன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
வசந்தா - 001 417 319 0748
கிரிதரன் - 006 183 037 280
வானதி - 009 477 075 9781

(CS27891) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 09 . 1942



மறைவு
12 . 02 . 2024

### அமரர் அன்னபூரணம் நடராசா

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், பிரான்பற்று பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணம் நடராசா அவர்கள் கடந்த (12.02.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-கண்மணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சிவலிங்கம்-பார்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கம் நடராசாவின் (இளைப்பாறிய தபால் அதிபர்) அன்பு மனைவியும், மலர்விழி (அதிபர், யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), கயல்விழி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணபாலன் (அஸ்பெஸ்ற்றோஸ் சிமெந்து தொழிற்சாலை), அருள்நேசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, சிங்கராசா, சிவபாக்கியம், அன்னலட்சுமி, செல்வராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைராசா, அழகரத்தினம் மற்றும் இராசரத்தினம், (மங்களா ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்ஷிகா, சௌமியா, கௌஷிகா, சஞ்சீவ், தனுஷ், பவித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2024) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27897) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 வது பிறந்தநாள் நினைவும் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலியும்



தோற்றம் : 14.02.2003 மறைவு : 03.03.2017

## செல்வன் தவத்துரை ஹரிஷன்

(யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி தரம் - 8 மாணவன்)



ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆற்றுவார் தேற்றுவார் யாருமின்றி
ஆறாத வேதனையில் தவிக்கிறோம்
உன் பாசத் தங்கை
ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்
பரீட்சையில் சித்தியடைந்தபோது
சந்தோச மழையில்
துள்ளிக் குதித்தீர்
இப்போ உன் ஆசைப் பவுண் கிளி
க.பொ.த.சாதாரணதர பட்சையில் 9A
பெற்றுவிட்டாள் - அதை நீர் அறிவீரோ
விண்ணிலிருந்து நீரும்
உமது பெரியம்மாக்களும்



அவளை எப்போதும் வாழ்த்துங்கள்
கல்லூரியில் உன்னோடு படித்த
மாணவத் தோழர்கள்
இப்போ பெரியவர்களாக
வளர்ந்துவிட்டார்கள்
வீதி வழியே அவர்களை
காணும் போது
நீரும் இப்போ இவர்களைப்போல
வளர்ந்திருப்பீர் என என்னும்போது
என் மனம் படும் வேதனை
உமக்கு தெரிகிறதா
நீர் மூன்று மருமக்களுக்கு ஓர்
குட்டி மாமா
இப்போ குட்டிச் சித்தப்பாவுமாக
ஆகிவிட்டீர் - ஹரிஸ் குட்டி
ஏழு ஆண்டுகள் என்ன
ஏழாயிரம் ஆண்டுகள் ஆனாலும்
ஆறாது எம் துயரம்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

**உன் பிரிவால் வாடும்**

**அப்பா, அம்மா, தங்கை, ஆசைமாமா, கச்சேரிமாமா, இந்தி பெரியம்மா, சிச்சு பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், அண்ணா, மச்சான்மார், மச்சாள், மருமக்களான ரஸ்வினா, சயன், அனுஷாலி, பெறாமகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள்,**

# ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் அநுரவுடன் சந்தித்துப் பேச்சு!

தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைவரம் தொடர்பிலும், நிகழ்நிலைக் காப்புச் சட்டம் குறித்தும் ஜே.வி.பி. யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுடன் பேச்சு நடத்தியுள்ளார் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் திருமதி காமென் மொரெனோ.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் நடப்பு அரசியல் நிலைமை தொடர்பிலும், இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் என்பன பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாகத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவது தொடர்பில் அநுர சுட்டிக்காட்டியுள்ளார். ஜனநாயகத்தை பலப்படுத்த உரிய காலப் பகுதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் உள்ளது என்றும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் பற்றியும் குறித்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைப் பிரதிநிதிகள் குழுமத்தின் பிரதிப் பிரதானி லார்ஸ் பிறெடால், ஜே.வி.பி.யின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத்தும் பங்கேற்றிருந்தனர். (ம-44)

**காணி விற்பனைக்கு**

நாவற்குழி A9 வீதியில் பனை அபிவிருத்திச் சபைக்கு முன்பாக 400 m தூரத்தில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 608 7502

(cs.53960) (N-1)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக தகவல் தொழில்நுட்பக் கிளையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி சந்திரபாமா கவிச்சந்திரன்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி பரமேஸ்வரி தாமோதரம்பிள்ளை**

அவர்கள் கடந்த 10.02.2024 ஆம் திகதி சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரி சங்கம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம்
## யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 14.03.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப் படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 15.03.2024 மற்றும் 16.03.2024**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்./ பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601**

PEOPLE'S BANK
Pride of the Nation

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# இரண்டாம் ஆண்டு நினைவு தினம்



கடந்த 07.03.2022 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் உயர்திரு விஸ்வநாதர் குருநாதன்**

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மண்ணில்
04.10.1942

விண்ணில்
07.03.2022

அன்னாரின் இரண்டாம் ஆண்டு நினைவுநாள் மாசி மாதம் 2 ஆம் நாள் இன்று (14.02.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**69?, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.**

**மனைவி
021 222 6711
சிவகுரு ஆதீனம்**

(cs.27882) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடியத் தூதுவருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு



கொழும்பு, பெப். 14

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் இருவரும் நேற்றுச் சந்தித்துப்பேச்சுநடத்தியுள்ளனர். கொழும்பிலுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்பின்போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கனேடியத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் டானியல் வூட், அரசியல் அலுவலர் கணேசநாதன் சாகித்தியனன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமைக்காக சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்துரைத்த தூதுவர், ஈழத்தமிழர்களின் அரசியல் நலன்சார்ந்து முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளுக்கு தம்மாலான பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். தொடர்ச்சியாக இருவரும் பரஸ்பரம் இருதரப்புக் கலந்துரையாடலில் பங்கெடுத்தனர். (ம-125-66)

# போதைப்பொருளை கட்டுப்படுத்துமாறு யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப். 14

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்றையதினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

'போதைப்பொருள் என்னும் பெருந்தீமையிலிருந்து எம்மையும், எமது சந்ததியினரையும் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணப் பேருந்துநிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்ட சர்வமத பேரவை தலைவர் சிவஸ்ரீ கிருபானந்த குருக்கள், செயலாளர் அருட்பணி இ.ராஜ்குமார், யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர், மௌலவி வி.ஏ.எஸ்.சுபியான் உள்ளிட்ட மதத்தலைவர் கொண்டனர். (ம-27)


## காணி, வீடு விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளியில் சகல வசதிகளும் கொண்ட புதிய மாடி வீடும், நெல்லியடி நகரப் பகுதியில் நல்ல சூழலில் ஒன்றே முக்கால் பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

(தரகர்கள் தேவையில்லை)

**070 750 2666**

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

மேலும்:-

- சிட்டை எழுதுனர்
- பைக்கிங் செய்பவர்
- காசாளர் (வயது 55-70)
- விற்பனையாளர் ஆகியோரும் உடன் தேவை

தொடர்புகளுக்கு:

**021 222 9286, 077 748 8093**

(CR 44812) V-1


## கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## சபை நிதி - 2024 (கட்டம் II)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 11.01.2021 ம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆம் திகதிய 04/2016(iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவரும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2024.02.14 ஆம் திகதியில் இருந்து 2024.02.28 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.02.14 ஆம் திகதியிலிருந்து 2024.02.28 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **3000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
09. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு 2024.02.29 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
10. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
11. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.02.21 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41(13) /4/Council/ PII/2024/06 | மண்டாகுள வீதி புனரமைத்தல் ( நாச்சிமார் கோவில் வீதி) | 9.40 | 90 நாட்கள் | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 94,000.00 | 13.06.2024 |
| NP/14/41(13) /4/Council/ PII/2024/07 | அன்னமார் கோவில் வீதி புனரமைத்தல் - உரும்பிராய் | 6.19 | 90 நாட்கள் | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 62,000.00 | 13.06.2024 |
| NP/14/41(13) /4/Council/ PII/2024/08 | அயட்டைப்புலம் 4 வது குறுக்கு வீதி புனரமைத்தல் - உரும்பிராய் | 5.96 | 90 நாட்கள் | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 60,000.00 | 13.06.2024 |
| NP/14/41(13) /4/Council/ PII/2024/09 | வச்சாவளை வீதி புனரமைத்தல் - கோப்பாய் | 5.22 | 90 நாட்கள் | C7& C6 (வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 53,000.00 | 13.06.2024 |
| NP/14/41(13) /4/Council/ PII/2024/10 | அம்மன் வீதி புனரமைத்தல் - இடைக்காடு | 4.98 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 63 நாட்கள் | 50,000.00 | 30.05.2024 |
| NP/14/41(13) /4/Council/ Maintenance /PII/2024/11 | விநாயகர் வீதி – மீள் தாரிடல் - நீர்வேலி | 1.42 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி நிர்மாணம்) | 49 நாட்கள் | 15,000.00 | 16.05.2024 |
| NP/14/41(13) /4/Council/ Maintenance /PII/2024/12 | அரசடி வீதி – மீள் தாரிடல் - இருபாலை | 1.12 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி நிர்மாணம்) | 49 நாட்கள் | 12,000.00 | 16.05.2024 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.02.14

(CR 41810) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனை அனுப்புவதற்கு இந்திய அரசாங்கம் தயார்

## சென்னை உயர் நீதிமன்றத்தில் அறிவிப்பு

புதுடில்லி, பெப். 14
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலை வழங்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான உத்தரவினைப் பிறப்பிக்கவுள்ளதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.
தமிழகத்தின் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாந்தன் தாயகத்தில் உள்ள தமது தாயாரை பார்ப்பதற்கு இலங்கை செல்ல அனுமதிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்த நிலையில், அந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போது சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான தற்காலிகப் பயண ஆவணத்தை இலங்கை துணைத் தூதரகம் அனுப்பியுள்ள நிலையில், அதனை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
இந்த நிலையில் ஆவணம் கிடைக்கப்பெற்ற பின்னர் இலங்கைக்கு சாந்தனை அனுப்புவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. (ம)

### ஜனாதிபதித்...

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும், இதன் ஓர் அங்கமாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது பற்றி தற்போது பேசப்படுகின்றது எனவும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டிவந்த நிலையிலேயே ஜனாதிபதி ஊடகப்பிரிவு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.
அத்துடன், அடுத்த ஆண்டு பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்கான நிதி, 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும். தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவைச் சார்ந்துள்ளதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழுவுடன் அரசு இணைந்து செயற்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்குரிய பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். எனவே, இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### சுகாதாரத்...

கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டன. இரண்டாவது நாளாக இன்றும் போராட்டத்தைத் தொடர அவை தீர்மானித்துள்ளன.
சுகாதாரத் தொழிற்சங்கங்களின் இந்தப் போராட்டத்தால் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். வெளிநோயாளர்கள் பிரிவு மட்டுமல்லாமல் குருதிப்பரிசோதனைகள் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் பல பின்னடைவை பொதுமக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.
இந்தப் போராட்டத்தை நேற்றுடன் நிறுத்திவிடாது, இன்றும் தொடரவுள்ளதாக சுகாதாரத் தொழிற்சங்கங்கள் கூட்டிணைவின் ஒருங்கிணைப்பாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.
போராட்டம் தொடர்பில் சிறிலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் வடமாகாணத் தலைவர் எஸ்.எச்.எம்.இல்ஹாம் தெரிவித்ததாவது:-
"ஊதியப் பரிசீலனைகள் தொடர்பில் இடம்பெற்ற பேச்சுகளின்போது, எமது கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டதன் விளைவாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
இந்தப் போராட்டமானது அப்பாவி மக்களுக்கு எதிரானது இல்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாங்களும் வருந்துகின்றோம். எங்களை அரசாங்கம் அரச சேவையாளர்கள் எனக் கருதாத நிலையிலே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்களும் அரச சேவையாளர்கள். சுகாதாரச்சேவைக்கு நாங்களும் முக்கியமானவர்கள் என்பதை காண்பிப்பதற்காகவே ஒன்றிணைந்த சுகவீன விடுமுறைப் போராட்டமாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது" - என்றார். (அ-ம-56-110-27-66)

### நுண்நிதிக்...

பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இலங்கையில் நுண்நிதிப் பிரச்சினை காரணமாகப் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக இந்தக் குழு நேற்றுக் கூடியது. இதன்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.
நுண்நிதிக் கடன்களால் 28 இலட்சம் கிராமப்புற மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அதில் 24 இலட்சம் பேர் பெண்கள் எனவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.
இந்தக் கடன்கள் குறைந்த தொகையாக இருந்தாலும், கிராமப்புற மக்களால் அதனைச் செலுத்தமுடியாத நிலையில், 38 முதல் 48 சதவீத வட்டி அறவிடப்படுவதாகவும் இதன் காரணமாகக் கிராமப்புறப் பெண்களின் வாழ்க்கை முற்றாக மாறியுள்ளதாகவும் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.
அதிகமான கிராமப்புறப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலைக்குச் செல்வதற்கு நுண்கடன் நெருக்கடி காரணமாக அமைந்திருப்பதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டினர்.
மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் உள்ள வங்கி அல்லாத ஆறு பிரதான நிதி நிறுவனங்களில் கடன் பெற்ற பெருந்தொகையான குழுவினராலேயே நுண்நிதித் துறையில் இந்த நெருக்கடி உருவாகியிருப்பதாகவும், நுண்நிதி கடனான 84 ஆயிரம் மில்லியன் ரூபாவில் 67 ஆயிரம் மில்லியன் ரூபாவை இந்நிறுவனங்கள் வழங்கியிருப்பதாகவும், கடன் பெற்றவர்களின் சொத்துகளைக் கையகப்படுத்துவதை இந்நிறுவனங்கள் ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.
நுண்நிதிக் கடன்களால் பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையிலுள்ள நிறுவனங்கள் இந்தக் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தன. மேலும், இலங்கை மத்திய வங்கி, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, சமுர்த்தித் திணைக்களம், பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, நிறுவனப் பதிவாளர் திணைக்களம் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் பங்கெடுத்தனர். (அ-ம)

### ஐ.தே.க.வுக்கு...

ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல், கட்டுகம்பொல தொகுதி அமைப்பாளரும், முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவின் மகனுமான அசங்க பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று மீண்டும் இணைந்துகொண்டார். இதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே பாலித ரங்கே பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.
'ஐக்கிய மக்கள் சக்தி என்பது தற்போது இராணுவமுகாமாக மாறிவருகின்றது. ஓய்வுபெற்ற இராணுவத்தினர் அந்தக் கட்சியில் இணைந்து வருகின்றனர். இதனால் சஜித்தின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. தற்போது கூட ஒன்றும் தாமதமாகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் தாய்வீடு திரும்பலாம். சஜித் பிரேமதாஸ ஐ.தே.க.வில் வளர்ந்தவர். அவரும் எந்நேரத்திலும் வரலாம். அதேவேளை, உரியகாலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவார். சஜித்தோ, அநுரவோ எமக்குச் சவால் அல்லர்' - என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

### வடக்கு...

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் இரண்டாம் கட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் கொழும்பில் உள்ள நிதியமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-
'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் இரண்டாம் கட்டச் செயற்பாடுகளை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்துக்கு மாகாணசபைகளின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் முதலாம் கட்ட நடவடிக்கையின்போது 1.1 மில்லியன் மேன்முறையீடுகள் (11 இலட்சம்) நாடளாவிய ரீதியில் கிடைக்கப்பெற்றன. அவற்றில் வடக்கு மாகாணத்திலிருந்து செய்யப்பட்ட முறையீடுகளே முதலாவதாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது - என்றார்.
வடக்கு மாகாணத்தில் குறைந்த வருமானம்பெறும் குடும்பங்களின் தரவுகள் தயார்நிலையில் உள்ளதாகவும், இதனூடாக புதிய பயனாளர்களைத் தெரிவுசெய்வது இலகுவாக அமையும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் இதன்போது தெரிவித்தார். (அ-ம-26)

### 'ஒரு நாடு...

தொடர்பாக இடம்பெற்றுள்ள வினாவால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.
வடமாகாணக்கல்வித்திணைக்களத்தால் 11ஆம் தர மாணவர்களுக்கு நடத்தப்படும் மூன்றாம் தவணைப் பரீட்சையில் தமிழ்மொழிக்கான பரீட்சை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்டது.
தமிழ்மொழிப் பாடத்தின் பகுதி - 1 வினாத்தாளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க என்ற தலைப்புடன் வெளியான வினாக்களில்,
'ஒருநாடு: இருதேசம்' எனத் தமிழர்கள் முழங்கினர். இவ் வாக்கியம் (1)தனி வாக்கியம் (2)கலப்பு வாக்கியம் (3) தொடர் வாக்கியம் (4) கூட்டு வாக்கியம்
எனக் குறிப்பிடப்பட்ட கேள்வியே சமூக வலைத் தளங்களில் வெளியாகிச் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
குறித்த கேள்வி தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.
இதேவேளை - 'ஒருநாடு: இருதேசம்' என்ற கொள்கையைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தனது அரசியல் கொள்கையாக கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

### தீப்பற்றிய...

தலைமன்னார், பியர் பகுதியில் உள்ள தனியார் காணியில் உள்ள பனைமரங்கள் திடீரென தீப்பற்றியதையடுத்து பதற்றமடைந்த மக்கள் கடற்படையினருக்குத் தகவல் வழங்கினார்கள். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கடற்படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.
தீவிபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-213)

### தங்கம்...

அடிப்படையில் ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 64 ஆயிரம் ரூபாவாகவும், 24 பவுண் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 900 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (அ-ம)

### யாழ்...

சிவில் சமூகப் பிரஜைகள் குழுவினருடனான சந்திப்புக்காக அவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சந்திப்புகளுக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் தற்போது பொலிஸ் மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய சேவையாக சுகாதாரசேவை அறிவிப்பு!

## அதிவிசேட வர்த்தமானி வெளியானது

**கொழும்பு, பெப். 14**

**சுகாதார சேவைகளுடன் தொடர்புடைய பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.**

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இந்த விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, மருத்துவமனைகள், நோயாளர் விடுதிகள், மருந்தகங்கள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, போசனை ஊட்டல் மற்றும் சிகிச்சை தொடர்பாகத் தேவைப்படும் அல்லது செய்ய வேண்டிய அனைத்துச் சேவைப் பணிகளும் அத்தியாவசிய சேவைகளாக அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மேலதிகக் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, 72 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டன. இரண்டாவது நாளாக இன்றும் போராட்டத்தைத் தொடர அவை தீர்மானித்துள்ளன. இந்த நிலையிலேயே சுகாதாரத்துறை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்ட ஒருதுறையின் ஊழியர்கள் எழுந்தமாறாக போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தமுடியாது. ஆதலால், போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் நடவடிக்கையாகவே இந்த வர்த்தமானி அறிவித்தல் பார்க்கப்படுகின்றது. (ம)







முல்லைத்தீவு, வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம் கிராமத்தின் முத்தமிழ் விளையாட்டுக் கழகத்தின் கபடிப் போட்டிகள் புலம்பெயர் கனடா வாழ் தமிழர் அருணின் முழுமையான நிதிப் பங்களிப்புடன் கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற்றன. முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறையின் ஆதரவுடன், முல்லைத்தீவு மாவட்டக் கழகங்களுக்கு இடையில் பகல், இரவாக சிறப்பான ஒழுங்குபடுத்தலுடன் நடைபெற்ற மாபெரும் கபடி சுற்றுப்போட்டிகளில் வெற்றி பெற்ற கழகத்தினருக்கும், வீர,வீராங்கனைகளுக்கும் வெற்றிக் கேடயங்களும் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ப-13)

# 20 கிலோ கஞ்சா நயினாதீவில் மீட்பு

நயினாதீவில் நேற்றுக் காலை 20 கிலோ 140 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். நயினாதீவுக் கடற்கரையில் கஞ்சா இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு கடற்படையுடன் இணைந்து விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125)


**வேலையாட்கள் தேவை**

பாணிப்பூரி விற்பதற்கு ஆட்கள் தேவை
பகுதி நேரம்/முழுநேரம்
தொடர்புகளுக்கு: 076 294 3552

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

CD. 200 (நீலநிறம்) 82 Sri .... ....
மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு
(Full கண்டிசன்)
தொடர்புகளுக்கு:
077 545 6420, 077 548 8044

**வேலையாட்கள் தேவை**

சமையல் தெரிந்த 35 வயதுக்கு மேற்பட்ட பெண் வேலையாட்கள் தேவை.
தங்குமிடம் இலவசம்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 501 6255
(cs.53968) (N-1)

**வேலை ஆட்கள் தேவை**

1. இடம் :- Jaffna Inn Hotel
2. வேலை :- Hotel ஐ துப்புரவு செய்யும் வேலை (Cleaning Staff)
3. வயது எல்லை :- 35 வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.
Date :- 2024.02.15 - 2024.02.25
Time :- 9AM - 11AM நேர்முகத் தெரிவு நடைபெறும்.


## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 02 . 1950



இறப்பு 13 . 02 . 2024

**மங்களராணி மகாதேவன்**

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், கலைப் பட்டதாரி - வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)**

குரும்பசிட்டி தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் 179/3, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மங்களராணி மகாதேவன் நேற்று (13.02.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம்-அன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், ஆறுமுகம்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஆறுமுகம் மகாதேவனின் (முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர், முன்னாள் யாழ். இந்துக் கல்லூரியின் இரசாயனவியல் ஆசிரியர்) அன்பு மனைவியும், மங்களவதனியின் (ஆசிரியர், யா/ சன்மார்க்க வித்தியாலயம்) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வாமதேவன் (பொறியியலாளர்) மற்றும் சக்திதாசன் (France), உதயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவரூபன், சுவஸ்திகா ஆகியோரின் அன்பு பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்பு: 077 834 6282 (மங்களவதனி)**

**179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS 53942)A-1

## தசாஹ கிரஹயக்ஞ அழைப்பிதழ்



பேரன்புடையீர்!

எங்கள் குடும்ப குலவிளக்கு

அமரர்
**ஸ்ரீமதி பத்மாவதி (பட்டம்மாள்) கோபாலகிருஷ்ண சர்மா**

**அவர்களின்**

அந்திமக் கிரியைகளாகிய தசாஹம் கிரஹயக்ஞ கிரியைகளில் யாவரும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா மோஷ்சமடைய இதய பூர்வமாக பிரார்த்திப்போமாக

**நிகழ்வுகள்**

14.02.2024 - புதன்கிழமை - தசாகம்-காலை 9மணி
15.02.2024 - வியாழக்கிழமை - ஏகோதிஷ்டம்-காலை 8மணி மாசிகம்-பகல் 12மணி
16.02.2024 - வெள்ளிக்கிழமை - சபிண்டிகரணம்-காலை 9மணி
17.02.2024 - சனிக்கிழமை - கிரஹயக்ஞம் நவக்கிரஹஹோமம் மஹாலெஷ்மி பூஜை
பிரார்த்தனை மகேஸ்வரபூஜை - 12.30மணிக்கு (மதியபோசனம்) இடம்பெறும்

**கோகுலம் கற்பொக்கணை உடுவில் சுன்னாகம்**

**"சுபமஸ்து"**

**-இங்ஙனம்- கணவன் புத்திரர்கள்**
**070 629 9999, 077 354 1964**

CS (27901)-V-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.